திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, ராணுவத் துறையினருக்கு ரயில்வே பாஸ் கொடுக்கப்படுகின்றது. அதுபோன்று எல்லாக் காவல் துறையினருக்கும் ரயில்வே பாஸ் கொடுக்குமாறு நம்முடைய அரசு பரிந்துரை செய்யுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : ரயில்வே காவல் துறையினருக்கே நாம் செய்கின்ற பரிந்துரை ஏற்றுக்கொள்ளப்படவில்லை. பிறகு எல்லாக் காவல் துறையினருக்கும் எப்படிக் கொடுப்பார்கள் என்பது எனக்குப் புரியவில்லை.

திருமதி த. ந. அனந்தநாயகி : எம்.பி.க்களுக்கு ரயில்வே பாஸ் கொடுக்கப்படுவது மாதிரி எம்.எல்.ஏ.க்களுக்கும் முதல் வகுப்பு ரயில்வே பாஸ் வழங்குவதற்கு அரசாங்கம் முயற்சி எடுக்குமா? மத்திய அரசு நடவடிக்கை எடுத்தால் அந்த அரசோடு நம்முடைய அரசும் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இதுபற்றி இந்த மன்றத்திலே அடிக்கடி பிரச்னைகளை எழுப்பியுள்ளார்கள். இதுபற்றி யோசித்து, தமிழக அரசுப்பேருந்து வண்டிகளில் இலவசமாக உறுப்பினர்கள் செல்வதற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது. (குறுக்கீடு) ரிப்பேராகி விடும் என்று சொல்கிறார்கள், ரயில்கூட தான் ரிப்பேர் ஆகிவிடுகிறது, ரயில்கூடத்தான் தாமதமாக வருகிறது. ஆகவே இப்படிப்பட்ட யோசனையை கைவிடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பெ. மலைச்சாமி : தலைவர் அவர்களே, காவல் துறையினர் அலுவல் காரணமாக ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குச் செல்வதற்கு பாஸ் வாரண்ட் கொடுக்கப்படுகின்றது. ஆனால் வேறு துறையைச் சேர்ந்தவர்கள் அலுவல் காரணமாகச் செல்வதற்கு பாஸ் வாரண்ட் கொடுக்கப்படுவதில்லை . அரசாங்கம் இதை ஆராய்ந்து அலுவல் காரணமாகச் செல்கின்ற எல்லாத் துறையினருக்கும் பாஸ் வாரண்ட் கொடுக்க ஏற்பாடு செய்யுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: கேள்வி ரயில்வே காவல் துறையினரைப் பற்றியது. அதிலே மாண்புமிகு உறுப்பினர் அக்கறை உள்ளவர் என்றால் தனிக்கேள்வி போட்டால் பதில் தயாரித்துத் தரலாம்.

காவல் துறை அலுவலர்களின் நிகராடை.

* 179 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழகப் போலீசார் அணியும் குல்லாய், உடைகள் முதலியவற்றை மாற்றியமைக்கும் உத்தேசம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : 1967-லிருந்து மாநிலக் காவல் துறை அலுவலர்களும் சார்நிலைக் காவல் துறை அலுவலர்களும் தலையணியாக ' பீக் ' தொப்பிகளுக்குப் பதிலாக ' பெரட் ' தொப்பிகளை அணிய அனுமதிக்கப்பட்டுள்ளனர். 1969லிருந்து இந்தியக் காவல்துறை அலுவலர்களும் "பெரட்" தொப்பிகள் அணிய அனுமதி அளிக்கப்பட்டுள்ளனர். காவல்துறை அலுவலர்களின் நிகராடையை மாற்றும் செயற்குறிப்பு எதுவும் முடியுறு நிலையில் இல்லை.

1971 ஜூலை 10]

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, காவல் துறையினர் யூனிபார்ம் அணிந்துகொண்டிருக்கும்பொழுது நாமம், விபூதிப் பட்டை போன்ற மத சம்பந்தமானவற்றை அணியக்கூடாது என்று தடுத்து நிறுத்தப்பட்டுள்ளதா? இல்லையெனில் இனியாவது அப்படிப் பட்ட விதி செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இது உடையைப்பற்றியது. அணிகின்ற நெற்றிக் குறியைப்பற்றியல்ல.

திரு. கோவை செழியன் : 1966-ம் ஆண்டு தேனாம்பேட்டையிலே நடைபெற்ற ஒரு பொருட்காட்சியில் போலீசார்கள் எந்தவிதமான தொப்பிகள் அணியலாம் என்று வோட்டுக்கு விடப்பட்டு இப் பொழுது இருக்கும் தொப்பியே சரியென்று மக்கள் தீர்ப்பு அளித் திருப்பதாக ஒரு பத்திரிக்கைச் செய்தி வந்ததே அதைப்பற்றி அரசாங்கத்தினுடைய எண்ணம் என்ன?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்பொழுதுள்ள காவல் துறை யினரின் உடையை மாற்றுவதாக உத்தேசம் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதைப்போன்று மக்கள் தீர்ப்பு இருக்கு மானால் அந்த மக்கள் தீர்ப்பையும் இந்த அரசு மதிக்கத் தவறாது.

திரு. மா. சுப்பிரமணியன் : தலைவர் அவர்களே, காவல் துறை யினர் மில் துணியில் உடை அணிகிறார்கள். கைத்தறித் துணிகளை ஆடைகளுக்கு உபயோகப்படுத்தச் செய்வதற்கு அரசாங்கம் முயற்சி செய்யுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : காவல் துறையிடமிருந்து எந்த விதமான முறையீடும் வரவில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி :காவல் துறை கமிஷன் ரிப்போர்டை நமக்கு முன்னாலே சமர்ப்பித்திருக்கிறார்கள். குல்லாயை மாற்ற வேண்டுமென்று சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறதே, அதைப்பற்றி அரசு கவனிக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இவைபற்றியெல்லாம் போலீஸ் அதிகாரிகளோடு கலந்து பேசி உரிய நேரத்திலே உரிய ஆலோசனை கள் செய்யப்படும்.

திரு. கே. என். குமாரசாமி : தலைவர் அவர்களே, காவல் துறை யினர் அணிகின்ற உடைகள் வருஷத்திற்கு இரண்டு செட்டுகள்தான் கொடுக்கிறார்கள். அதை அதிகப்படுத்துவதற்கு அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இப்பொழுது அப்படிப்பட்ட உத்தேசம் எதுவும் இல்லை.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, காவல் துறையினர் அணிகின்ற ஆடையைப் பார்த்து பொதுவாக மக்களுக்கு அச்சம் ஏற்படவேண்டும். ஆனால் அவர்கள் காக்கி உடைதான் அணி கிறார்கள். இப்பொழுது யாரைப் பார்த்தாலும் காக்கி உடைகள் அணிகிறார்கள். ஒன்று போலீஸாருக்கு என்று தனி உடை வேண்டும்

அல்லது காக்கி உடைகளை மற்றவர்கள் அணியக்கூடாது என்று கொண்டு வருவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: காவல் துறையினரின் உடையின் நிறத்தை யாரும் தேர்ந்தெடுக்கக்கூடாது என்ற தடையைப் போடுவது இயலாத காரியம். காவல் துறையினர் அணிகின்ற உடையும் மற்றவர்கள் அணிகின்ற உடையும் வெவ்வேறு. நிறம் ஒன்றாக இருக்கலாம், ஆனால் உடையமைப்பு வேறு.

திரு. எம். முத்தையா: போலீஸாருக்கு குல்லாய்கள் செய்யக்கூடிய துணிகள் அரசாங்கத்திலிருந்து கொடுக்கப்படுகிறது. கால்சட்டை மேல்சட்டை இவற்றை தைத்துக் கொடுக்கிறார்கள். ஒவ்வொருவருக்கு அந்த உடை பொருந்தவில்லை. அவர்கள் அதைப் பிரித்து இரண்டாவது முறையாக தைக்கக்கூடிய சூழ்நிலை இருப்பது அரசுக்குத் தெரியுமா? எனவே தைக்காமலே துணியாகக் கொடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: கூடுமானவரையிலும் உடலளவுக்கு ஏற்ற உடைகள்தான் தரப்படுகின்றன. ஒன்றுக்கொன்று முரண்பட்டவைகள் ஏதாவது இருந்தால் உடனடியாக அவை கவனிக்கப்படுகின்றன.

திருமதி த. ந. அனந்தநாயகி: பல நெருக்கடியான கட்டங்களில் போலி உடைகள் போலீஸ் உடைகள் கிடைக்கின்றன, அவற்றை வாங்கி அணிந்துகொண்டு மிரட்டுகிறார்கள். எனவே போலீஸ் உடை, தொப்பி இவை வேறு யாருக்கும் கிடைக்காமல் கட்டுப்படுத்த அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: போலி உடைகளை கடைகளில் வைத்திருக்கமாட்டார்கள். வேடமிட்டு வரவேண்டுமென்று எண்ணுகின்றவர்கள் அவர்களே தயாரித்துக் கொள்வார்கள்.

Ground water resources in Dharmapuri District

* 186 Q.—THIRU B. VENKATASAMY: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether any detailed survey has been made in Dharmapuri district to find out the availability of ground water resources; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா: (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை:

Land Development Bank for Kelamangalam Block

* 187 Q.—THIRU B. VENKATASAMY: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) Whether there is any proposal to start a Land Development Bank at Kelamangaam Block in Denkanikota Taluk; and

(*b*) if so, when it will be started?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்: (அ) ஆம்.

(இ) நாள் குறிப்பிடப்படவில்லை.